[1994 ஏப்ரல் 22
முற்பகல் 10.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 354, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

354–

தமிழகத்திலுள்ள திரையரங்குகளில் ஆபாச திரைப்படங்களைத் திரையிடுவதைத் தடுத்தல்.

***9908 –** திரு. டி. சுதர்சனம் :*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்திலுள்ள திரையரங்குகளில் விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் மிகவும் ஆபாசமான ஆங்கிலம், மலையாள மொழித் திரைப்படங்கள் வெளி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் நியமிக்கப்படுகிற தணிக்கைக் குழிவினரால் காட்சிக்குத் தகுதி வாய்ந்தது என்று சான்றிதழ் வழங்கப்பட்ட படத்தைத் தவிர வேறு எந்தப் படத்தையும் திரையரங்குகள் திரையிடக் கூடாது. மேற்படி நிபந்தனையை மீறி, ஆபாசமான படங்கள் திரையிடும் உரிமதாரர்கள்மீது, உரிமம் வழங்கும் அலுவலர்கள் தமிழ்நாடு திரையரங்கு (ஒழுங்குமுறை) சட்டம் 1955-ன் பிரிவு 9(2) (பி)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொண்டு, உரிமத்தினை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நிறுத்தம் செய்து ஆணை பிறப்பித்து வருகின்றனர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபோது, விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில், மிகவும் ஆபாசமான படங்கள் ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் திரையிடப்படுவதைத் தடுப்பதற்கு மத்திய அரசினுடைய சென்சார் போர்ட் இருக்கிறது என்று கூறினார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில மொழிப் படங்கள் திரையிடப் படுகின்றபோது, எந்தப் படத்தை திரையிட வேண்டும், எந்தப் படத்தை திரையிடக் கூடாது என்பதற்கான சென்சார் போர்டை மாநில அரசு தான் நியமிக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இந்த அவையிலேயே கொண்டு வந்து, இனிமேல் அப்படிப்பட்ட திரைப்படங்களைத் திரையிடுவதையும், ஆபாசம் நிறைந்த போஸ்டர்கள் ஒட்டுவதையும்

1994 ஏப்ரல் 22]

தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரங்களை எடுத்துக்கொள்கின்ற வகையிலேதான் மைய அரசு செயல்படுகின்றது. ஆகவே அந்த அடிப்படையில் மாநில அரசுக்கு மைய அரசு அந்த உரிமையைக் கொடுக்குமேயானால் அதை ஏற்று, இந்த அரசு செயல்படுவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அம்மமுத்து பிள்ளை, (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினருடைய கேள்வி. இரண்டாவது துணைக் கேள்வி உங்களுக்கு அனுமதிக்க முடியாது. ஒருவருக்குப் பதிலாகக் கேட்கிறவர்களுக்கு இரண்டாவது துணைக் கேள்வி அனுமதிப்பதில்லை. விதிப்படி அனுமதிக்க முடியாது. டாக்டர் அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையாளப் படங்களின் பெயர்களைத் தமிழில் மொழி மாற்றம் செய்யும்போது உண்மையான பெயரைச் சொல்லாமல், கவர்ச்சி ஊட்டுகின்ற பெயர்களைச் சூட்டுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் படத்தில் சம்பந்தப்படாத கவர்ச்சிக் காட்சிகளை சுவரொட்டிகளாகப் போட்டு விளம்பரப்படுத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர்களிலேயும், காட்சிகளிலேயும் மாற்றம் தருகின்ற வகையிலே பெயர்களும், காட்சிகளும் காட்டப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். எப்படிக் காட்டினாலும் சரி, எந்த வடிவத்தில் காட்டினாலும் சரி, அந்தப் படத்தில் ஆபாசம் இருந்தால் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

355—

தனியார் பள்ளிக் கட்டிடங்களுக்கு "உறுதித்தன்மை சான்றிதழ்" வழங்குதல்.

***10045**—திரு. இரா. அப்பு நடேசன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—